**18.02.2021 இ.ம.எண். 28/2019 அ.வ.எண். 316/2004 எ.ம.சா.1 விவேகானந்தன்**

**குறுக்கு விசாரணை**

வாதி சலுக்கை கிராமத்தில் குடியிருந்து வருகிறார். மனுதாரர் கிரண்குமார் என்பவரும் சலுக்கை கிராமத்தில் குடியிருந்து வருகிறார். தாவா சொத்துக்கள் சலுக்கை கிராமத்திலும், தாழம்பள்ளம் கிராமம், வந்தவாசி டவுன் எல்லைக்களுக்குள்ளும் அமைந்துள்ளது. நான் தற்சமயம் பெங்களூரில் வசித்துவருகிறேன். நான் 1983ம் வருடத்திலிருந்து பெங்களூரில் வசித்து வருகிறேன். அவ்வப்போது நான் வந்தவாசி மற்றும் தாவா சொத்துக்கள் அமைந்துள்ள கிராமங்களுக்கு வந்து பராமரித்து வருகிறேன். இறந்துபோன 2ம் வாதி எனது தாயார் ஆவார். அவருக்கு நானும் எனது சகோதரி சாவித்திரி ஆகியோர் வாரிசுகள் ஆவர். எனது சகோதரி இறந்துபோய்விட்டார். எனது சகோதரியின் கணவர் இறந்துபோய்விட்டார். அவருக்கு 3 பெண் குழந்தை மற்றும் ஒரு ஆண்குழந்தை பிறந்தன. எனது சகோதரியின் மகள் சங்கரி என்பவரை வாதி திருமணம் செய்துள்ளார். எனது தாயார் பூங்காவனம்மாள் என்பவரை வாதி நடராஜன் தான் அவரது வீட்டில் வைத்து பராமரித்துவந்தார் என்றால் சரியல்ல. அவர் சலுக்கை கிராமத்தில் உள்ள எங்களது வீட்டில் குடியிருந்துவந்தார். அவரை நான்தான் பராமரித்துவந்தேன். எனது தாயார் தனது 75வது வயதில் இறந்துபோனார். எனது தாயார் எங்களது வீட்டில் தனியாக வசித்துவந்தார். எனது தாயார் இறந்தபோது அவரது ஈமசடங்கு காரியங்களை வாதிதான் செய்தார் என்றால் சரிதான். அதற்கான செலவினங்களை நான்தான் ஏற்றுக்கொண்டேன். அந்த செலவினங்களை நான் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி நடராஜன் தாக்கல் செய்துள்ள அ.வ.எண். 316/2004ல் தாவா சொத்துக்கள் எனது தாயார் பூங்காவனம்மாளுக்கும் பாகம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். கடந்த 15.08.2006 அன்று எனது தாயார் தாவா சொத்துக்களில் அவருடைய பாகத்தை வாதி நடராஜனின் மகன் கிரண்குமார் என்பவர் அடையவேண்டும் என உயில்சாசனம் ஒன்றை எழுதிவைத்தார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எனது தாயார் உயில்சாசனம் எதுவும் எழுதிவைக்கவில்லை. உயில் சாசனம் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணம் ஆகும். எனது தகப்பனார் 09.02.2000ம் அன்று எழுதிவைத்த உயிலின் அடிப்படையில் எனது தாயார் பூங்காவனம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட "டி" ஷெட்யூல் சொத்துக்களை வாதியின் மகன் கிரண்குமார் என்பவர் அடைந்துகொள்ள எனக்கு ஆட்சேபணை ஏதும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் உயில் மூலம் அடைந்த சொத்துக்களை 19.04.2005 அன்று கிரையம் செய்து கொடுத்துவிட்டார். தாவா சொத்துக்களில் எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஏதும் கிடையாது. அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் விற்பனை செய்துவிட்டார். தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனாரின் தனிப்பட்ட சொத்துக்கள் அல்ல என்றும், அதனால் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எனது தந்தை எழுதிவைத்த 09.02.2000 உயில் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தையின் சுயசம்பாத்திய சொத்துக்கள் ஆகும். அதற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 09.02.2000ம் அன்று உயில் ஏற்பட்டதாக நான் கூறிய நாளுக்கு பின்பு எனது தந்தை உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் 51 சென்ட் நிலத்தை எனது தந்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், எனவே அவர் அந்த உயிலின் படி செயல்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார்தான் கிரையம் செய்துகொடுத்தார். எனது தாயார் அவருக்கு ஒதுக்கப்பட்ட 51 சென்ட் நிலத்தை விற்பனை

செய்தார். அந்த கிரைய தொகையை நான்தான் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமான வாக்குமூலத்தின் 3ம் பத்தியில் நான் பூர்வீக சொத்து என குறிப்பிட்டுள்ளது எனது தாயார் பூங்காவனம்மாளுக்கு அவரது தாய்வீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் ஆகும். கடந்த 06.07.1988 மற்றும் 11.11.1988 தேதிகளில் எனது தாயார் அடைந்த பூர்வீக சொத்துக்களை வாதி ஏமாற்றி எழுதிவாங்கிக்கொண்டார். எனது தாயார் தானாக முன்வந்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் வாதிக்கு எழுதிகொடுத்தார் என்றும், அதேபோல் தாவா சொத்துக்களில் அவரது பாகத்தை வாதியின் மகன் கிரண்குமார் என்பவர் அடையவேண்டுமென்று உயில் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. அந்த உயில் பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணமாகும். நடராஜன் என்பவர்தான் எனது தாயாரை பராமரித்து வந்தார் என்றும், அதன் காரணமாக எனது தாயார் அவரது இறுதிசடங்குகளை வாதி செய்யவேண்டுமென்று கூறி வாதியின் மகன் பெயருக்கு உயில் எழுதிகொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை இறந்துபோது நான் என் தந்தைக்கு கொல்லிவைத்தேன். எனது தாயார் இறந்தபோது வாதி நடராஜன் நான் கொல்லிவைக்கிறேன் என்று கூறியதால் நான் என் தாயாருக்கு கொல்லிவைக்கவில்லை. இறுதிசடங்குகளுக்கு நான் பணம் கொடுத்தேன். 09.02.2000ம் அன்று எனது தந்தை எழுதிய உயிலின்படி வாதி நடராஜன் அடைந்த "பி" ஷெட்யூல் சொத்துக்களை 13.01.2014 அன்று எச்.டி.எப்.சி வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார். "பி" ஷெட்யூல் சொத்துக்கள் மற்றும் எனது தாயாரின் பூர்வீக சொத்துக்களையும் அடமானம் வைத்துள்ளார். நான்சொன்னவாறு வாதி நடராஜன் உயிலின் மூலம் அடைந்த சொத்துக்களை அடமானம் வைக்கவில்லை என்றும், தாவா சொத்துக்களில் அவருக்கு பாகம் உள்ளதன் அடிப்படையில்தான் தாவா சொத்துக்களில் சிலவற்றை அடமானம் வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 15.08.2006 அன்று எனது தாயார் உயில் எழுதியதாக கூறுகிறார்கள். கடந்த 15.08.2006 அன்று எனது தாயார் உரிய சாட்சிகள் முன்னிலையில் உயில் எழுதியுள்ளார் என்றும், நான் தவறாக என் தாயார் எவ்வித உயிலையும் எழுதிவைக்கவில்லை என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி நடராஜன் அ.வ.எண்.316/2004ல் பாகபிரிவினை கோரி எனது தாயாருக்கும் தாவா சொதுதுக்ளில் பாகம் இருப்பதாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதனால்தான் எனது தாயார் அவருக்கு சேரவேண்டிய பாகம் சம்மந்தமாக உயில் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த உயிலின் அடிப்படையில் மனுதாரர் இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எனது தகப்பனார் உயில் எழுதிவைத்து தாவா சொத்துக்களை எனது தகப்பனர் உயிலின் மூலம் நாங்கள் அடைந்து அனுபவித்து வருகிறோம் என்றும், எனது தாயார் அடைந்த சொத்துக்களை அவர் கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றும், எனவே எனது தாயார் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எவ்வித உயிலும் எழுதிவைக்க முடியாது என்றும், தாவாசொத்துக்களில் எனது தாயாருக்கு உரிமை உள்ளதா, இல்லையா என்பது இவ்வழக்கின் தீர்ப்பின் மூலம் தான் அறியமுடியும் என்றும், எனவே மனுதாரர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவேண்டும் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை-** இல்லை.